விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 063 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 08 செவ்வாய்க்கிழமை (20.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=


## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை எதிர்வரும் வாரங்களில்

### இந்திய உயர்ஸ்தானிகர் நம்பிக்கை வெளியீடு

(கொழும்பு)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை எதிர்வரும் வாரங்களில் ஆரம்பமாகுமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையே பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற் 15



## புலிகளால் புதைக்கப்பட்ட தங்கத்தைத் தேடி அகழ்வு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட தங்க ஆபரண புதையலைத் தேடி நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸாரால் கடந்த 16ஆம் திகதியன்று குறித்த அகழ்வு பணிக்கான அனுமதி நீதிமன்றில் கோரப்பட்ட நிலையில், மன்றின் அனுமதியுடன் நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட விசுவமடு - குமாரசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றிலேயே விடுதலைப் 15

## வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின்

# உரிமைகளை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உள்ளேன்


### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உள்ளேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மலையக மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிய 02



## கைதடியில் வீடொன்று தீப்பிடித்ததில் சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பிரதேசத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மதியம் வீடொன்று தீப்பிடித்து 15

## பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்


(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்காக அத்தியாவசிய 15

## யாழ்.மத்திய கல்லூரிக்கு பெண் அதிபர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

### ஆட்சேபனை அடையாளப் போராட்டம்



15

## நீதிக்கான போராட்டத்தின் 7ஆவது ஆண்டை முன்னிட்டு

### கிளிநொச்சியில் இன்று எதிர்ப்புப் பேரணி

(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்யவுள்ளதையொட்டி பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

குறித்த பேரணியானது, இன்று கந்தசாமி கோயில் முன்றலில் தொடங்கி கிளிநொச்சி டிப்போச்சந்தி வரை நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் போராட்டத் 15

## ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு



### ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் உள்ளிட்ட குழுவினர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக 15

## ஐஸ் போதையுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா - தம்பனைச் சோலைப் பகுதியில் 80,000 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பொலிஸார் 15

## அல்லைப்பிட்டியில் விபத்து; பெண்ணொருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மண்கும்பான் 4ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்த தங்கரத்தினம் தனஸ்வரி (வயது-46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் பேருந்திலிருந்து இறங்க முற்பட்ட வேளை பேருந்தின் சாரதி பேருந்தை நகர்த்தியமையால் தவறிவிழுந்துள்ளார்.

அதில் படுகாயமடைந்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், உயிரிழந்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் கோரவிபத்து பெண் விரிவுரையாளர் மரணம்



(கொழும்பு)


கொழும்பில் இடம்பெற்ற கோர விபத்தில் பெண் விரிவுரையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் பிரிவில் பணிபுரிந்து வந்த உதவி விரிவுரையாளர் லக்மினி போகமுவ, விபத்தில் உயிரிழந்தவராவார்.

சில தினங்களுக்கு முன்னர் பத்தரமுல்ல பிரதேசத்தில் விபத்துக்குள்ளான இவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரது மறைவுக்கு சமூக வலைத்தளங்களில் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ம-7)



**யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள மகாசன் மரைன் (Mahasen Marine) என்ற கப்பல் கட்டும் தொழில்சாலையில் சூரியசக்தியில் இயங்கக் கூடிய அதி சொகுசு சுற்றுலாக் கப்பல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.**

**கப்பலின் பரீட்சார்த்த பயணம் யாழ்ப்பாணம் காரைநகர் துறைமுகத்திலிருந்து நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

## உரிமைகளை...

மலையகத் தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை நிலைநாட்ட அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் முதல் கட்டமாக 1,300 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் நன்கொடைகளைப் பயன்படுத்தி இந்தத்திட்டத்தை முன்னெடுக்கிறோம்.

அதற்காக இந்திய அரசுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு நாட்டின் அனைத்து தமிழ்ப் பிரதேச பாடசாலைகளையும் ஏனைய பாடசாலைகளின் நிலைமைக்கு நிகராக மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கத் திட்டமிட்டு வருகிறோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். அதன்பின்னர் மலையக தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிச் செல்லும் போதும் பிரச்சினைகள் எழும். வரி அதிகரிக்கப்பட்டதுடன் தொடர்புள்ள பிரச்சினை இருக்கிறது.

எனினும், இந்தப் பிரச்சினைகள் நீண்ட காலம் நீடிக்காது. சிறிது காலம் செல்லும் போது அந்த வரிச்சுமை குறையும் என்றார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக நிதிக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **சிவஞானம் இராகுலன்** அவர்களின் அன்புத்தாயார்

திருமதி

**சிவஞானம் இராசகாந்தி**

**தோற்றம் : 04.10.1948 மறைவு : 17.02.2024**

அவர்கள் கடந்த 17.02.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்....

**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-8385)


## பணியாளர் தேவை

Computer மூலம் Email, பிறிண்டிங், ரைப்பிங், போட்டோசொப், ஸ்கானிங் ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 315 6470**

(C-8372)


## மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 08 - 1945

மறைவு 16 - 02 - 2024

**திருமதி சின்னத்தம்பி ஜெயமணி**

கரவெட்டி சாமியன் அரசடி பிலாவடி வீதியை (கரவெட்டி - அம்பம் ஆஸ்பத்திரிக்கு அருகில்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி ஜெயமணி அவர்கள் கடந்த 16.02.2024 (வெள்ளிக்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பாறுபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் தவமணி, சிறீறஞ்சிதமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஈசுரபாதம், ஆறுமுகம், மகேஸ்வரி, கந்தப்பு, கனகசபை மற்றும் சரஸ்வதி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வினோதன் (லண்டன்), நிரோசன் (லண்டன்), சுபாங்கனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அபிராமி (லண்டன்), பிரியா (லண்டன்), கார்த்திக் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிதுன், பிரிஷான், விருஷாலி, அயன், ஆதன், விருஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.02.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-8386)


## பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு!

## மருத்துவர் சமால் சஞ்சீவ

**(கொழும்பு)**


**இலங்கை மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கு பாரிய அளவில் தட்டுப்பாடு நிலவி வருவதாக சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவ தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் நிபுணத்துவ மருத்துவர் சமால் சஞ்சீவ இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாட்டில் சத்திரசிகிச்சை உபகரண பட்டியலின் முன்னுரிமை அடிப்படையில் சுமார் 3800 உபகரணங்கள் தட்டுப்பாடாக காணப்படுவதாகவும் இதற்கமைய மொத்தமாக 5800 உபகரணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைக்கு இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் தீர்வு காணப்படாவிட்டால் மருத்துவமனை கட்டமைப்பில் நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதயத்திற்கு பயன்படுத்தப்படும் ஸ்ட்ரென்த் வகைகள், கண்களுக்கு பயன்படுத்தப்படும் லென்ஸ் வகைகள், கண் சத்திரசிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள், அவசர சிகிச்சை பிரிவில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் இவ்வாறு தட்டுப்பாடாக காணப்படுகின்றது என தெரிவித்தார். (5-6)

## ஜூன் மாதத்திற்குள் கடனை நிறைவு செய்வதே அரசின் இலக்கு



(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்வதே அரசாங்கத்தின் இலக்கு என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாடுகளுக்கு இடையிலான கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மார்ச் இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறையாண்மை பத்திரங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே நாட்டின் ஆழ மான பொருளாதாரப் பிரச்சினையாக கருதப்படும் கடன் மறுசீரமைப்பை எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்வதே அரசாங்கத்தின் இலக்கு எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (5-6)

## கடற்பகுதி பாதுகாப்புக்கு அமெரிக்கா விமான உதவி

(வோஷிங்டன்)



இலங்கை கடற்பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு விசேட விமான மொன்றை வழங்குவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இந்தோ - பசுபிக் மூலோபாயம் குறித்து அமெரிக்க அமைதி நிறுவகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றுகையில், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் டொனால்ட் லூ இதனை அறிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் நோக்கில், இலங்கையின் கரையோரக் கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இந்த வருடம் அமெரிக்க அரசாங்கம் பீச்கிச் ராப்ட் கிங் ஏர் விமானத்தை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (5-6)

# உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இரத்து

(கொழும்பு)

காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தர்லுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்து செய்வதற்கு பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்களுக்கான அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கடந்த வருடம் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வேட்பாளர்கள் எதிர்கொளளும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## செய்தித்துளிகள்

### 10 இலட்சம் முட்டைகள் தினசரி விநியோகம்

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனத்திற்கு தினமும் 10 இலட்சம் முட்டைகள் விநியோகிக்கப்படும் எனவும் சந்தைக்கு அதிகபட்சமாக முட்டை விநியோகம் செய்யப்பட்டாலும் சந்தையில் முட்டை தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாத காரணிகள் இருப்பதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, அத்தியாவசிய பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டில் தற்போது டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில் எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்க ளின் விலைகள் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பவதாகவும் தெரிவித்தார். (5-6)

### 364 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது

(சென்னை)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்திச் செல்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 364 கிலோ கேரளா கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகபட்டினம், வேட்டைக்காரனிருப்பு, நாலுவேதபதி பகுதியிலேயே குறித்த சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர்.

நாகபட்டினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின் போது படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

### நாட்டை வந்தடைந்த மாலைதீவு கப்பல்



(கொழும்பு)

மாலைதீவிலிருந்து சில்வர் மூன் என்ற சொகுசு பயணிகள் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பஹாமாஸ் கொடியுடன் வருகை தந்த இந்த கப்பலில் 516 சுற்றுலாப் பயணிகளும் 400 பணிக்குழாமினரும் வருகை தந்துள்ளனர்.

குறித்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, காலி உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# முல்லை மாவட்ட அணி அரையிறுதிக்கு தகுதி



Friendship challenge Trophy Football Tournament ஆல் நடத்தும் அணிக்கு பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதி போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் யாழ் லீக் மற்றும் முல்லை லீக் அணிகள் மோதியிருந்தன. இடை வேளையின் பின்னரான ஆட்டம் விறுவிறுப்பை பெற்றிருந்தது. இருப்பினும் ஆட்ட நேர முடிவில் 2-2 என்ற கோலக்கணக்கில் சமநிலையில் போட்டி முடிவடைந்தது.

சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் 4-3 என்ற கோல் கணக்கில் முல்லை லீக் தெரிவு அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

போட்டியில் யாழ் லீக்சார்பில் விக்னேஷ் ,லியோ தலா ஒவ்வொரு கோலினையும். முல்லை லீக் சார்பில் டாயான், ஸரெபெக்சன் தலா ஒவ்வொரு கோலினையும் பெற்று கொடுத்திருந்தனர். (நி-5-6-250)

## ஜெய்ஸ்வால் இந்தியாவின் புதிய சேவாக்-மைக்கேல் புகழாரம்

இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதிய 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 434 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகளின் முடிவில் இந்தியா 2 -1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த தொடரில் இளம் வீரர் ஜெய்ஸ்வால் இரட்டை சதம் அடித்து அசத்தினார். மேலும் 12 சிக்சர்கள் அடித்த அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் அதிக சிக்சர்கள் அடித்த வீரர் என்ற வாசிம் அக்ரமின் உலக சாதனையை சமன் செய்தார்.


இந்நிலையில் ஜெய்ஸ்வால் தான் இந்திய அணியின் புதிய சேவாக் என்று முன்னாள் இங்கிலாந்து கப்டன் மைக்கேல் வாகன் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

இந்தியா ·புதிய வீரேந்திர சேவாக்கை கொண்டுள்ளது. அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் பல்வேறு பவுலிங் அட்டாக்கை சேவாக் அடித்து நொறுக்கியதை போலவே ஜெய்ஸ்வால் விளையாடக் கூடிய வீரராக திகழ்கிறார் என்று கூறியுள்ளார். (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3044

**பிரியா**




**சோபனா**





**தர்சன்**




**கவிதன்**




**ஆர்த்திகன்**





**தாரணி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40,000 மெற்றிக் தொன் எரிபொருளினை மானியமாக வழங்கிய ஜப்பான்



(கொழும்பு)

இலங்கையின் சுகாதார அமைப்புக்கு ஆதரவாக ஜப் பான் 40,000 மெற்றிக் தொன் டீசல் எரிபொருளை மானியமாக வழங்கியுள் ளது.

இந்த நன்கொடை நாடு முழுவதும் அத்தியாவசிய மருத்துவ சேவைகளின் தடையின்றி போக்குவரத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள "டொல்பின் ஜெட்டியில்" நேற்று நடைபெற்ற வைபவத்தின் போது இல ங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகியால் இந்த உதவித் தொகை உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவிடம் கையளிக்கப்பட்டது. (5-6)

# நாட்டு மக்கள் சாபக்கேடான ஆட்சியில் துன்பப்படுகிறார்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் -சஜித்

(கொழும்பு)

**அரசாங்கத்தினால் நாட்டு மக்களின் நலன்களை முன்நிறுத்திக்கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை எட்ட முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பொலநறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

"வங்குரோத்தான நமது நாட்டில் மக்களை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

சாதாரண மக்கள் 3 வேளை உணவு உண்பதற்கு சிரமப்பட்டு வருகின்றனர்.



இந்த சாபக்கேடான அரசாங்கத்தின் ஆயுட்காலம் இவ்வருடத்துடன் முடிந்துவிடும்" என சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டார். (5-6)

# தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவித்து ,நாடு திரும்ப செய்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலையிட வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு அவர் இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தவிடயத்தில் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் இராஜதந்திர ரீதியில் தலையீட்டை செலுத்த வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கைவிடுத்துத்ள்ளார். (5-6)

# இடைவகுப்பு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 1, 5, 6 மற்றும் உயர்தரம் தவிர்ந்த ஏனைய, இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள், அந்தந்த பாடசாலைகளில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலைகளில் வெற்றிடங்கள் காணப்படுமாயின், அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களால், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படும்.

பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்பட்டியலை அதிபர்களின் ஊடாக அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்படும்.

இதேவேளை, ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரமே பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (5-6)

# தொடரூந்துடன் மோ.சைக்கிள் மோதி விபத்து- மூவர் பலி

(கொழும்பு)

ஆராய்ச்சிக்கட்டுவ மய்யாவ பகுதியில் நேற்று தொடருந்து டன் மோட்டார் வண்டி மோதி யதில் ஒரே குடும்பத்தைச் சேர் ந்த மூவர் உயிரிழந்தனர்.

பெண் ஒருவரும் இரண்டு குழந்தைகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது இரு குழந்தை களையும் பயிற்சி வகுப்புக்கு அழைத்துச் சென்ற தாய் பயணித்த மோட்டார் வண்டியே இவ்வாறு தொடரூந்துடன் மோதி விபத்துக் குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக் கட்டுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இராசிபலன்

20.02.2024
மாசி 08, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 1.08 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.10 மணிவரை

சுபநேரம் -11.02-12.32 மணிவரை
இராகுகாலம்-3.32-5.02 மணிவரை
வீம ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்
விசாகம்,அனுசம்.

வளவன்

**மேஷம்** — செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** — பொது வாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்** — இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** — குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** — அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கனவுப் பலிதமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தடைகள் விலகி காரியங்கள் கைகூடும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — வழிபாடு குதூகலம் தரும், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும் வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**தனுசு** — குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** — மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** — தொழில் ரீதியாக வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

நல்ல புத்தகங்களை விரும்பாதவன் படிக்கத் தெரியாதவர்களுக்குச் சமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைப்பிற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

(நெளுக்குளம்)

**புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலக பிரிவுக் குட்பட்ட பகுதியில் சுண்ணாம்பு சூளை வீதி திருத்தப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 115 மில்லியன் நிதியில் 22.5 மில்லியன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்களை இணைத்து கூட்டம் நடத்திய போது மக்கள் அனைவரும் இணைந்து தமது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட 17 இலட்சம் ரூபாய் நிதியை சுண்ணாம்பு சூளை வீதி திருத்த பணிக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த நிதி வேறு தேவைக்காக மாற்றியதாக புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒதுக்கப்பட்ட விடயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த நிதியில் எமது வீதியை புனரமைக்க வேண்டும். அந்த நிதி வேறு தேவைக்கு மாற்றக்கூடாது என வலியுறுத்தி குறித்த புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். புதுக்குடியிருப்பு சமுர்த்தி வங்கி முன்பாக இருந்து கவனயீர்ப்பு பேரணியாக சென்ற மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வாசல் வரை சென்று அங்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி திட்டமிட்டபடி தமது வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

குறித்த மக்களுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துரையாடி மக்களது கோரிக்கை தொடர்பாக மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுத்தருவதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(5-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணை க்களம் மற்றும் அரச இலக்கிய விருது ஏற்பாட்டுக் குழு ஒன்றிணைந்து வருடா வருடம் ஏற்பாடு செய்யும் "அரச இலக்கிய விருது வழங்கல் விழா - 2024" தொடர்பாக, எழுத்தாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்களிடமிருந்து தமிழ், சிங்களம், ஆங்கில மொழி களில் நூல்கள் விருதுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2023 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் .2023 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில், முதற் பதிப்பாக வெளியிடப்பட்டதும், 49 பக்கங்களுக்குக் குறையாததுமான அச்சிடப்பட்ட நூலின் மூன்று பிரதிகள் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றை "அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு எதிர்வரும் 2024.03.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க முடியும்.

மேலும் இவ் விடயம் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட மேல திக அரசாங்க அதிபர். ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் குறுகியகால கற்கைநெறி பேச்சு மொழி ஆங்கிலம், கணனிக்கல்வி கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021 222 3374) தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மேட்டுப் பயிர்ச்செய்கையினை சேதப்படுத்தும் குரங்குகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் குரங்குகளின் தொல்லையினை கட்டுப்படுத்துமாறு விவசாயிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் கீழ் பெருமளவில் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள நிலையில் குரங்குகளினால் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

மேட்டுப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியாத அளவிற்கு பயிர்ச் செய்கையினை குரங்குகள் அழித்து வருகின்றன.

மாவட்ட விவசாய குழுக் கூட்டத்திலும் குரங்குகளினால் ஏற்படுத்தப்படும் பயிர் அழிவுகள் தொடர்பாக விவசாயிகளினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவே அக்கராயன் பிரதேசத்தில் குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கு வாயு துப்பாக்கிகளை பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(5-6 350)

# சர்வதேச தாய்மொழி தினம் யாழ்.பல்கலையில் இன்று

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் தாய்மொழி தினமாக அனுஷ்டிக்கப்படும் பெப்ரவரி 21 ஆம் தினத்தினை முன்னிட்டு யாழ்.பல்கலைக் கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையினர் இன்று மற்றும் நாளை ஆகிய தினங்களில் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை "லிங்குவா 2024" எனத் தலைப்பிடப்பட்ட "மொழி தேசத்திற்கு உள்ளும் அப்பாலும்" என்ற கருப்பொருளில் கண்காட்சியினை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராசா ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இதில் மொழியியல் ஆங்கிலத் துறையின் தலைவர் திருமதி.கவிதா நவகுலன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆகியோர் ஆரம்ப உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் திறப்புரையினை அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பேராசிரியர் அண்ணாமலை நிகழ்நிலையில் ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் சிறப்பு விருந்தினர் உரையையும் மொழியியல் ஆங்கிலத்துறையில் கடமையாற்றும் பேராசிரியர் திருமதி.சுபதினி ரமேஷ் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல் ஆகியோர் சிறப்புரைகளையும் ஆற்றவுள்ளனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 600 | 800 | 500 |
| தக்காளி | 800 | 600 | 750 | 900 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 200 | 125 |
| கோவா | 450 | 450 | 500 | 500 | 600 |
| கரட் | 800 | 500 | 700 | 700 | 800 |
| பூசணி | 300 | 280 | 300 | 300 | 230 |
| புடோல் | 200 | 200 | 300 | 200 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 220 | 250 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 420 | 400 | 450 | 350-480 |
| பாகற்காய் | 400 | 400 | 450 | 400 | 350 |
| வெண்டக்காய் | 600 | 350 | 300 | 500 | 350 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 150 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 500 | 370 |
| லீக்ஸ் | 350 | 380 | 400 | 400 | 600 |
| பீற்றூட் | 300 | 300 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 700 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 1700 | 1500 | 1200 | 1400 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 150 | 60 | 30-70 |
| தேசிக்காய் | 150 | 250 | 250 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 70-100 | 40-100 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 300 | 300 | 150 |
| முள்ளங்கி | 100 | 120 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 250 | 80 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை உயிர்போல் காப்போம்

# தலைமன்னாரில் அமைதி வழி போராட்டம்

(மன்னார்)

**தலைமன்னார் ஊர்மனை கிராமம் பகுதியில் சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று மன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன் மக்களால் அமைதி வழி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்கு, விசேட விசாரணை பொலிஸ் குழுவை நியமி, சிறுவர்களை உயிர்போல் காப்போம், இணைய வழிப் பாலியல் துஷ்பிரயோகங்களை நிறுத்துங்கள், எமது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் அதே நேரம் சிறுமியின் புகைப்படத்தையும் ஏந்தியவாறு அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டனர்.(5-6-285)

சிறுமியின் மரணத்திற்கு தாமதம் இன்றி நீதி கிடைக்க வேண்டும் என கோரியும் விசேட நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று குறித்த வழக்கை விசாரிக்க கோரியும் தலைமன்னார் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# துப்பாக்கி பிரயோகம்

## நடத்தியவரை தேடிவரும் பொலிஸார்

## மன்னாரில் சம்பவம்



(மன்னார் )

மன்னார் உயிலங்குளம் பகுதியில் பொலிஸ் சிவில் சீருடைக்கு ஒத்த சீருடையுடன் வருகை தந்த நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நிலையில் நபர் ஒருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ள நிலையில் உயிலங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முன்னதாகவே மன்னார் முள்ளிக்கண்டல் பகுதியில் இரு நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் குறித்த துப்பாக்கி சூட்டில் இறந்த நபர்களுடன் சம்பந்தப்பட்ட நபர் மீதே நேற்று துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

(5-6-285)

### சிறுமி விவகாரம்; மறியலில் சந்தேகநபர்

(மன்னார்)

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர் நேற்று பொலிஸாரினால் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் உயிரிழந்த சிறுமி சார்பில் மன்றில் முன்னிலையாகினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (5-6)

# யாழில் இலவச கண் பரிசோதனை முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கிளப் நடத்தும் இலவச கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களை தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் இன்று காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை யாழ்ப்பாணம், 1 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள எஸ்.ரி.எஸ் கண் மருத்துவமனையில் இடம் பெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை மார்ச் மாதம் 3 ஆம் திகதி எஸ்.ரி.எஸ் மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்கள் கிளினிக் கொப்பிகளுடன் இன்று எஸ்.ரி.எஸ் மருத்துவமனைக்கு சமுகமளிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.(5-6)

# தச்சன்தோப்பு வீதியில் கொட்டப்படும் கழிவுகள்

## மக்கள் அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தச்சன் தோப்பு வீதியில் தொடர்ச்சியாக கொட்டப்படும் கழிவுகளால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதியையும் ஏ-32 வீதியையும் இணைக்கின்ற தச்சன் தோப்பு வீதியை தினமும் பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் பயன்படுத்திவரும் நிலையில் இரவு வேளைகளில் [illegible] தெரியாத நபர்களால் விலங்குக் கழிவுகள், முடி வெட்டும் நிலையக் கழிவுகள், பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய பெருமளவான கழிவுகள் வீதியில் கொட்டப்படுகின்றன.

குறித்த வீதியில் கழிவுகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவும் முன்வர வேண்டும் என பொது மக்கள் வேண்டு [illegible] (5-6-30)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய தேசிய கொடிகளை எரித்து கனடாவில் சீக்கியர்கள் போராட்டம்



(ஒட்டாவா)

கனடாவின் வான்கூவார் பகுதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்திற்கு எதிரில் இந்திய தேசியக் கொடிகளை எரித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சீக்கிய ஆன்மீகத் தலைவர்களில் ஒருவரான ஹார்டிப் சிங் நிஜார் என்பவர் சர்ரே பகுதியில் ஆலயமொன்றின் அருகாமையில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்திற்கு நியாயம் வேண்டி குறித்த் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த தாக்குதலை இந்திய அரசாங்கமே மேற்கொண்டுள்ளது என போராட்டத்தில் காலிஸ்தான் கொடிகளை ஏந்திய போராட்டக்காரர்கள் இந்திய எதிர்ப்பு கோசங்களை எழுப்பினர்.

இது அமைதியான போராட்டம் எனவும் வன்முறைகள் எதுவும் கிடையாது எனவும் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவரான மாஜின்டர் சிங் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய தேசியக் கொடிகளை எரித்தும் வெட்டி சிதைத்தும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. சீக்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அதிகளவில் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(5-6)

## அவ்திவ்கா நகரை கைப்பற்றிய ரஷ்ய இராணுவ வீரர்கள்

## பாராட்டிய புடின்



(கீவ்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனின் அவ்திவ்கா நகரைக் கைப்பற்றியதற்காக இராணுவப் பிரிவுகள் மற்றும் அவர்களின் தளபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கிரெம்ளின் இணையத் தளம், பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவிடமிருந்து நகரத்தை கைப்பற்றியது குறித்த அறிக்கையை புடினுக்கு வழங்கியதாகக் தெரிவித்துள்ளது.

“சிறந்த இராணுவ நட வடிக்கைகளுக்காக அவ் திவ்காவுக்கான போர்களில் பங்கேற்ற உங்கள் வழிகாட்டுதலின் கீழ் உள்ள அனைத்து துருப்புக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று புடின் கூறியதாக முகவர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (5-6)

## கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த 4 மாத குழந்தை



(டில்லி)

ஆந்திரா மாநிலத்தில் 4 மாத குழந்தை ஒன்று 120 பொருட்களை அடையாளம் காட்டி உலக சாதனை படைத்துள்ள நிகழ்வு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

நவீனயுகமான இந்த காலகட்டத்தில் தொழில் நுட்பங்கள் அதீத வளர்ச்சி அடைந்து வருவதைப் போல வே காலத்திற்கு ஏற்றவாறு மனிதர்களும் வளர்ச்சி அடைந்து வருகிறார்கள்.

ஆந்திர மாநிலம் நாடி காமா நகரில் பிறந்த நான்கு மாதங்களே ஆன கைவல்யா தனது மிகச் சிறிய வயதிலேயே காய்கறிகள், பழங்கள், பறவைகள், புகைப்படங்கள் என வெவ்வேறு 120 பொருட்களை அடையாளம் காணும் திறமையை கொண்டுள்ளார்.

தனது குழந்தைக்கு சிறப்பு திறமை இருப்பதை அறிந்த தாய் ஹேமா அதனை இவ்வுலகத்துடன் பகிர்ந்து கொள்ள முடிவு செய்து தன் குழந்தையின் திறமையை வெளிப்படுத்தும் வீடியோவை நோபல் உலக சாதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனை பார்வையிட்ட Noble World Records குழுவினர் இக்குழந்தை உலக சாதனைக்கு தகுதியானவர் என்று முடிவு செய்த நிலையில் குழந்தைக்கு சிறப்பு சான்றிதழை வழங்கியுள்ளது. (5-6)

## ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய 400 பேர் கைது



(மொஸ்கோ)

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி விளாடிமீர் புடினை கடுமையாக எதிர்த்து வந்தவருமான அலெக்சே நவால்னியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய 400 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அலெக்சே நவால்னியின் மரணம் ஒரு படுகொலை என்று அவரது செய்தித் தொடர்பாளர் கீரயார்மிஷ் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

மேலும் அவரின் உடலை வழங்குவதற்கு அதிகாரிகள் வேண்டுமென்றே தாமதம் செய்து வருவதாக குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

இந்நிலையில் நவால்னியின் உடல் அவரின் குடும்பத்திற்கு எப்போது ஒப்படைக்கப்படும் என்பது குறித்தும் உறுதியான தகவல் இன்னும் வெளியிடப்படவில்லை. அத்துடன், நவால்னியின் மறைவுக்கு ரஷ்யாவின் பல நகரங்களில் உள்ள நினை விடங்களில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நடை பெற்றன.

அதன்போது குறித்த நிகழ்வுகளில் பங்கேற்ற 400 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டின் மனித உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. (5-6)

## பாலஸ்தீன அகதிகள் உ
## தடுக்க சுவர் எழுப்

(கைநோ)

இஸ்ரேல்- காசா மோதல் இன்னும் முடிவுக்கு வராத நிலையில் காசாவிலிருந்து வரும் பாலஸ்தீன அகதிகளின் வருகையைத் தடுக்க எகிப்து தனது எல்லையில் 23 அடி உயரத்தில் சுவர் எழுப்பி வரு கிறதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீன நகரமான ரஃபா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத் தும் என்ற அச்சம் ஏற்பட்டுள் ளதால் அப்பகுதியில் குடியிருக் கும் மக்கள் எகிப்தின் சினாய் தீபகற்பப் பகுதியில் குடியேறி வருகின்றனர்.

இந்நிலையில் அகதிகளின் வருகையைத் தடுக்கும் வகை யில் எகிப்து சுவர் எழுப்பி வரு கின்றது.

இந்நிலையில் காசா மக் கள் வருகையை தடுக்க எகிப் தின் சுவர் கட்டும் திட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள னர். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்குடியினர் மோதலில் பப்புவா நீயுகினியில் 64 பேர் பலி

(போர்ட் மோரேசெபி)

**பப்புவா நியூகினியா நாட்டில் பழங்குடியின மக்கள் இடையே ஏற்பட்ட மோதலில் 64 பேர் உயிரிழந்துள்ளனர்.**





பசுபிக் பெருங்கடலில் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தீவு நாடு பப்புவா நியூ கினியவில் பழங்குடியின மக்கள் அதிக அளவில் இங்கு வசித்து வருகின் றனர்.

பப்புவா நியூகினியாவின் தலைநகர் போர்ட் மோரே செபியில் இருந்து 600 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வபாக் என்ற நகரம் மலைப் பகுதிகளால் நிறைந்தது.

அங்கு வசிக்கும் பழங்குடியின மக்கள் இடையே நிலம் தொடர்பாக நீண்ட காலமாக மோதல் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் சிகின் மற்றும் கேகின் என்ற பழங்குடியின குழுக்கள் இடையே நடைபெற்ற மோதலில் 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரு தரப்பினரும் துப்பாக்கிச்சூடு நடத்திக் கொண்டதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மோதலை அடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவியதால் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப் பட்டுள்ளனர். (5-6)

## நவால்னின் மரணத்தை புடினே பொறுப்பேற்க வேண்டும்

### ஜஸ்டின் ட்ரூடோ

(ஒட்டாவா)

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி மரணம் தொடர்பில் தகவல் அறிந்த கனேடிய பிரதமர், விளாடிமிர் புடின் ஒரு அரக்கன் என தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னின் திடீரென சிறையில் உயிரிழந்தார். அவரின் திடீர் மரணம் தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். அத்தோடு, நவால்னியின் மரணத்தை புடினே பொறுப்பேற்க வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் நேற்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நவால்னியின் மரணச் செய்தியைக் கேட்ட கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ புடினை ஒரு அரக்கன் என்று அழைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், "நவால்னியின் மரணம் ஒரு சோகம். ரஷ்ய மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடும் எவருக்கும் புடின் எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுப்பார் என்பதை இது காட்டுகிறது. நவால்னியின் மரணம் புடின் ஒரு அரக்கன் என்பதைக் காட்டுகிறது" என்று தெரிவித்துள்ளார். (5-6)

## புதிய தளங்களை ஆபிரிக்காவிலும் நிறுவவுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு

### ஐ.நா கவலை


(அல்ஜீரியா)

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு, ஆபிரிக்காவில் தற்போது தமது புதிய தளங்களை நிறுவி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மேற்கு ஆபிரிக்க நாடுகளை தனக்கு ஏற்ற இடமாக மாற்றி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டுள்ள பட்டினி மற்றும் உள்நாட்டுப் போர்கள் காரணமாக மேற்கு ஆபிரிக்க நாடுகள் போராடி வருகின்ற நிலையில், குறித்த நிலைமைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு அந் நாடுகளில் தமது தளங்களை நிறுவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## உள்நுழைவதை ...ழப்பும் எகிப்து



## கனடாவில் 3 மில்லியன் பறவைகளுக்கு தொற்று நோய்


(ஒட்டாவா)

கனடாவில் சுமார் மூன்று மில்லியன் பறவைகளுக்கு, பறவைக் காய்ச்சல் நோய் பரவுகை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், நாட்டில் பறவைக் காய்ச்சல் தொற்று பரவுகை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களாக கனடாவில் பறவைக் காய்ச்சல் பரவுகை பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் விலங்குப் பண்ணைகளிலும் வர்த்தக ரீதியற்ற பண்ணைகளிலும் வளர்க்கப் படும் பறவைகள் அதிகளவில் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன என கனேடிய உணவு பரிசோதனை திணைக்களம் பறவைக் காய்ச்சல் பரவுகை தொடர்பில் அறிவித்துள்ளது. கடந்த சில மாதங்களாக கனடா மட்டுமன்றி உலகின் ஏனைய பல நாடுகளிலும் பறவைக் காய்ச்சல் பரவுகை அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கோழிகள் தவிர்ந்த ஏனைய பல பறவைகள் நோய்த் தொற்றினால் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா விவசாய அமைப்பு

## இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும்

(கொழும்பு)

**ஐ.நா விவசாய அமைப்பின் ஆதரவு இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்ந்தும் வழங்கப்படும் என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் குடோங்யு தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் குடோல்யு ஆகியோருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்குரோத்து நிலையில் இருந்து இலங்கையை மீட்டெடுத்துத் பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இதன் போது வாழ்த்து தெரிவித்தார். (5-6)

# சுகாதார தொழிற்சங்கங்களின்

## கோரிக்கைகளை ஆராய்வதற்கு விசேட குழு

(கொழும்பு)

சுகாதார தொழிற் சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதன்படி சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் துறைகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு இன்று செவ்வாய்க்கிழமை கூடி இது தொடர்பில் ஆராயவுள்ளனர்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரனவுக்கும் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புக்குமிடையில் நேற்று திங்கட்கிழமை சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்தக் குழுவை நியமித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால, மேலதிக செயலாளர்களான கீதாமணி கருணாரத்ன, வத்சலா பிரியதர்ஷனி உட்பட சுகாதார நிபுணத்துவ தொழிற்சங்க கூட்டணியின் பிரதிநிதிகள் குழுவொன்று கலந்து கொண்டது. (5-6)

# மேலும் 1,017 பேர் கைது

(கொழும்பு)


நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த 24 மணித்தியாலங்களில் 1,017 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 903 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 114 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நடவடிக்கைகளின்போது 1,386 கிராம் ஹெரோயின், 462 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 12,801 கஞ்சா செடிகள் உள்ளிட்ட மேலும் பல சட்டவிரோத போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (5-6)

# பொன்சேகா பதவி

## நீக்கத்துக்கு தடை உத்தரவு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பதவி நீக்கம் மற்றும் கட்சிப் பதவிகளில் இருந்து அகற்றுதலை தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அதன்படி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதுடன் இந்த தடை உத்தரவு 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கு பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சிலர் பெயரிப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-6)

# எட்கா ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில்

(கொழும்பு)

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை எதிர்வரும் மார்ச் மாதமளவில் அமைச்சரவையின் அனுமதியுடன் கைச்சாத்திடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவிற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஏப்ரல் மாதம் குறித்த ஒப்பந்தம் நிறைவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் மார்ச் மாதம் 10 மற்றும் 12 ஆம் திகதி களில் அடுத்த கட்ட பேச்சு வார்த்தை இடம்பெற்று அமைச்சரவை அனுமதியின் பின்னர் விரைவில் ஒப்பந்தம் எட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# இன்று ஒரு தகவல் 42



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தலைவலி

வணக்கம் சேர்!

மறுபடியும் ஆரம்பம்! "என்ன தலை வலியா" என்று கேட்டுடாதீங்க. தகவல் ஆரம்பம் என்று சொல்ல வந்தேன்.

தகவல் என்றால் என்ன? தலைவலி என்றால் என்ன? இரண்டும் ஒன்று தானே என்று சிலர் கேட்குற மாதிரி தோணுது.

இரண்டும் ஒன்றோ இல்லையோ இரண்டுக்கும் சம்பந்தம் இருக்கு. தகவலை கேட்டு கேட்டு உங்களுக்கு தலைவலி வரணும். இல்லை என்றால் அதை சொல்லி சொல்லி எனக்கு தலைவலி வரவேண்டும்.

எப்படி வந்தாலும் சரி இன்றைக்கு தலைவலியையே ஒரு தகவலாக ஆக்கிவிட்டால் என்ன? அதுவும் சரி தான். இந்த தலைவலி இருக்கே அது ஒன்றா இரண்டா எத்தனையோ ரகம்! இருக்கிற தலை ஒன்று!

அதுக்குள்ள ஒற்றை தலைவலி, இரட்டைத்தலைவலி அப்புறம் பித்த தலைவலி, பசித் தலைவலி இப்படி நிறைய! குடும்ப தலைவலியை சொல்லாமலே விட்டுட்டீங்களே என்று யாரோ முணுமுணுக்கிறீங்க. காதிலே விழுகிறது நான் சொல்லாம விட்டதனால அது இல்லாம விட்டுட போகுதா? அது இல்லை.

"தலைவலிக்கே தலைவர்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு தலைவர் உண்டு! அது தான் "மைக்ரேன் தலைவலி" இது வந்து விட்டா தாங்க முடியாது! சுவீடனிலே ஒரு டாக்டர். அவருடைய ஆராய்ச்சி எதைப் பற்றி தெரியுமா? தலைவலி பற்றி தான். அவங்க என்ன சொல்லுறாங்க என்று தெரிந்து கொண்டால் அது நமக்கு உதவியாக இருக்கும். பொதுவாக பல வகையான தலைவலிகள் வருவதற்கு என்ன காரணம் என்று அவங்க சொல்லுறாங்க. கவனமாக கேட்டு ஞாபகத்தில வைத்திருங்க!

பொதுவாக நாம செய்யிற வேலையோட தன்மை, வேலை செய்யிற இடத்தில உள்ள சூழ்நிலை, பொதுவாக நம்மை சுத்தி இருக்கிற சூழ்நிலை, இதுகளாலே ஏற்படுகிற பரபரப்பு, பதட்டம், ஆயாசம் இது தான் காரணம் என்று அவர்கள் சொல்லுறாங்க.

இதிலே ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? பதட்ட நிலையிலே நாம் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது இந்த தலைவலி வருவது இல்லையாம். பதற்றம் தணிந்ததற்கு அப்புறம் தான்மெதுவாக இந்த தலைவலி தலையை நீட்டு தாம்.

ஒருத்தர் கடுமையாக வேலை செய்து கொண்டு இருக்கிறார் இல்லை என்றால் ஒரு வாகனத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறார் அப்போது தலைவலி வருதில்லை. வேலை செய்வதை நிறுத்திய உடனே தான் தலைவலி வருகிறது. அப்பாடா வேலை முடிந்து விட்டது என்று நினைப்போம். "அவசரப்படாதீங்க இதோ நான் வந்து விட்டேன்" என்று அது வந்து விடும்.

சுறுசுறுப்பாக வேலை செய்து விட்டு ஓய்வு எடுக்கும் நேரத்தில் இது வருவதற்கு காரணம் என்ன? இரத்த ஓட்டத்திலே இருக்கிற மாறுதல் தான் இதற்கு காரணம் என அந்த டொக்டர் சொல்கிறார்.

வலியை உணர்த்தும் நரம்புகள் எல்லாம் மூளையிலே போய் முடிகிறது. வேலை செய்து ஓய்ந்ததும் இரத்த ஓட்டமும் குறைந்து விடுகிறது. இதனாலே மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தின் அளவு குறைகிறது. உடம்பிலே திசுக்களுக்கு தேவைப்படும் பிராண வாயுவை எடுத்து கொண்டு போவது இந்த ரத்தம் தானே இது மெதுவாகும் போது மூளையிலே உள்ள திசுக்களுக்கு கிடைக்கிற பிராண வாயு அளவும் குறைகிறது. அதனாலே தலைவலி வருகிறது என்பது அவரது அபிப்பிராயம்.

மைக்ரேன் தலைவலிக்கு என்ன காரணம்?

இது வரைக்கும் அதற்கு திட்டவட்டமாக காரணம் எதையும் சொல்ல முடியவில்லை. உலகத்திலே கிட்டத்தட்ட கால்வாசி பேருக்கு இது ஏற்படுகிறது. சாதாரணமாக வம்ச பரம்பரையாக இது வருகிறதாம் .5 பேருக்கு மைக்ரேன் தலைவலி என்றால் அதிலே 4 பேருக்கு இதுதான் காரணமாக இருக்குமாம். அவங்க அப்பா அம்மா யாருக்காவது இது இருந்து இருக்கும் என்று சொல்லுறாங்க.

இது வந்து விட்டால் வெளிச்சத்தையோ, சத்தத்தையோ கூட சகிச்சுக்கொள்ள முடியாது எங்கேயாவது ஒரு ரூமுக்குள்ள போய் கதவை சாத்திவிட்டு முடங்கிவிட்டால் போதும் என்று தோன்றும்.

சாதாரணமாக இது சில மணி நேரம் நீடிக்கும். சில பேருக்கு இரண்டு மூன்று நாள் கூட நீடிக்கும். ஹார்மோன்கள் சுரப்பதில் ஏற்படும் மாற்றமும் மைக்ரேன் தலைவலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். சாப்பிடும் ஆகாரத்தை பொறுத்தும் நமக்கு தலைவலி ஏற்படுவது உண்டு. எது ஒத்துக்கலையோ அதோட சகவாசமே வேணாம் விட்டு விடுங்க !

இதுல ஆறுதலான விடயம் என்ன என்றால் 50 வயதை தாண்டிவிட்டால் தலைவலியோட கடுமை குறைந்து விடும். சாதாரணமாக அறுபது வயது வரைக்கும் தான் இந்த தலைவலியோட அவதி எல்லாம். அதுக்கு அப்புறம் வந்தால் அது உடம்பு கோளாறாலே வந்ததாக இருக்கும் அதனாலே அறுபதாம் கல்யாணம் முடிந்தவர்கள் எல்லாம் அதனை நினைத்து பயப்பட வேண்டாம்.

அறுபதுக்கு அப்புறம் நமக்கு தலைவலி வராது நாம தான் மற்றவர்களுக்கு தலைவலியாக இருப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024-13.03.2024



கும்ப இராசி வாசகர்களே!

**அவிட்டம் 3,4 ஆம் பாதம்:** சகோதர, தைரிய, வீரிய காரகனான செவ்வாய், கர்ம காரகனான சனி பகவான் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு எல்லாவிதமான சக்திகளும் நிறைந்திருக்கும். நீங்கள் மேற்கொள்ளும் செயல்களை முடிக்கின்ற வரையில் அதற்குரிய பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். இந்த மாதம் உங்கள் ஜென்ம இராசிக்குள் இராசிநாதன் சஞ்சரிப்பதுடன் சூரியனும் இணைந்துள்ளார். அதன் காரணமாக மனதில் பதற்றமும் செயல்களில் குழப்பமும், நிதானம் இல்லாத தன்மையும் ஏற்படும். இந்த நேரத்தில் முயற்சிகளில் முழுமையான கவனம் தேவை. யோசிக்காமல் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். இந்த நெருக்கடியான நேரத்தில் குரு பகவான் பார்வை உங்களுக்கு சாதகமாக இருப்பதால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெரியோரின் ஆசிர்வாதம் கிடைக்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகி வருமானம் வர ஆரம்பிக்கும். அரசு அலுவலர்கள். பணியாளர்கள் தங்களுடைய வேலைகளில் கவனமாக இருப்பது மிக அவசியம். இல்லையெனில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. பெண்கள் குடும்ப நலனில் கூடுதல் அக்கறை செலுத்தி வருவதுடன் வார்த்தைகளில் கவனம் செலுத்துவது நன்மையாக இருக்கும். உடல் நலனிலும் அக்கறை கொள்ள வேண்டும். மாணவர்கள் கல்வியில் முழுமையான கவனத்தை செலுத்தி வருவது அவசியமாகும்.

சந்திராஷ்டமம்: பெப். 27

அதிர்ஷ்ட நாள்: பெப்.17,18,26. மார்ச் 8,9

பரிகாரம் அபிராமி அந்தாதியை தினமும் படிக்க விருப்பம் நிறைவேறும்.

**சதயம்:** யோக காரகனான ராகு. கர்ம காரகனான சனி பகவானின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு வாழ்வில் நெளிவு சுளிவுகள் அனைத்தும் தெரிந்திருக்கும். எப்படி எதை அடைவது என்ற வழிகளையும் அறிந்திருப்பீர்கள். இந்த மாதம் உங்கள் நட்சத்திரநாதன் தன குடும்ப வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வார்த்தைகளின் நிதானம் அவசியம். பொருள் வரவிற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். தடைப்பட்டிருந்த பணம் வந்து சேரும். வெளிநாட்டு முயற்சிகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். ஜென்ம ராசிக்குள் ராசிநாதன் சஞ்சரிப்பதால் மனதில் வீண் குழப்பம், சங்கடம் தோன்றும். அரசுவழி செயல்கள் இழுபறியாகும். சிலருக்கு சட்ட சிக்கல்கள் தோன்ற வாய்ப்பிருக்கிறது. விரய ஸ்தானத்தில் பூமிகாரகன் செவ்வாய் சஞ்சரிப்பதால் நீண்ட நாளாக விற்பனையாகாமல் இருந்த இடங்கள் இப்போது விற்பனையாக வழி பிறக்கும். சிலர் புதிய சொத்துகளை வாங்குவர். அஷ்டம ஸ்தானத்தில் கேது பகவான் சஞ்சரிப்பதால் எப்போதும் விழிப்புடன் இருப்பது நல்லது. உங்களுடன் இருப்பவர்களே உங்களுக்கு எதிராக செயற்படும் நிலை தோன்றும். மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு அத்தகைய நிலையை உருவாக்குவார். நட்புகள் உங்களை விட்டு விலகும் நிலை ஏற்படலாம். இருந்தாலும் சனிபகவானின் பத்தாமிடத்தின் மீதான பார்வையும், குருபகவானின் பார்வைகளும் சாதகமாக இருப்பதால் தொழிலில் தடைகள் விலகும் தொழிலுக்கான முயற்சிகள் வெற்றியாகும். பணம் பலவழிகளில் வர ஆரம்பிக்கும். குடும்பம், தொழிலில் இருந்த சங்கடம் விலகும். பெண்கள் வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நல்லது.




மாங்கல்ய ஸ்தானமான எட்டாம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் கணவரின் உடல் நிலையில் கவனம் செலுத்துவது அவசியம். குடும்பத்தை திட்டமிட்டு நடத்துவதும் வரவு செலவில் கவனமாக இருப்பதும் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை. ஆசிரியர்களின் ஆலோசனையால் நன்மை உண்டாகும்.

சந்திராஷ்டமம்: பெப்.27

அதிர்ஷ்ட நாள்: பிப்.17,22,26. மார்ச் 4,8,13

பரிகாரம்- சனீஸ்வர பகவானை வணங்க வாழ்வு சிறக்கும்.

**பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம்:** தன புத்திர காரகனான குரு, ஆயுள்காரகனான சனிபகவான் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு எப்பொழுதும் செல்வாக்கும் அந்தஸ்தும் இருக்கும். மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பீர்கள். உங்கள் வார்த்தைகளுக்கு எல்லா இடத்திலும் மதிப்பிருக்கும். இந்த மாதம் உங்கள் நட்சத்திரநாதன் மூன்றாம் இடத்தில் சஞ்சரித்தாலும் அவருடைய பார்வைகள் ஏழு, ஒன்பது, பதினொன்றாம் இடங்களில் பதிவதால் திருமண வயதினருக்கு வரன் வரும். வாழ்க்கைத் துணையின் உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும். தந்தைவழியில் ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த வரவு வரும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். இராசிநாதன் ஜென்ம இராசிக்குள் சஞ்சரித்தாலும் அவருடைய மூன்று, பத்தாம் பார்வைகளால் முயற்சிகள் வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். அலுவலகத்தில் உண்டான சங்கடங்கள் நீங்கும். சுயதொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவர். இருந்தாலும் உடல் நிலையில் எப்பொழு தும் கவனமாக இருக்க வேண்டும். இயந்திரம், வாகனங்களை இயக்கும் போதும் விழிப்புணர்வு அவசியம். பெண் களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். திருமணத்திற்காக காத்திருந்த சிலருக்கு வரன் தேடி வரும். தெய்வ அருள் கிடை க்கும். நட்புகளால் ஆதாயம் அதிகரிக்கும். பொருளாதார நிலை மேம்படும். மாணவர்கள் இப்போது கல்வியில் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும். மாதத்தின் பிற்பகுதியில் ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்பது நன்மையளிக்கும்.

சந்திராஷ்டமம்: பெப்.28

அதிர்ஷ்ட நாள்: பெப்.17, 21, 26, மார்ச் 3,8,12

பரிகாரம்- சிவபெருமானை வணங்கினால் மனக்கவலை தீரும்.

---



மீன இராசி வாசகர்களே!

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** ஞானம், தனம், அந்தஸ்திற்கு காரகனான குருபகவானின் அம்சத்தை பரி பூரணமாக கொண்டிருக்கும் உங்களுக்கு எந்த ஒன்றையும் கணித்து அதன்படி நடந்திடும் ஆற்றல் இருக்கும். மற்றவர்களுக்கு ஆலோசனை கூறி வழி நடத்துவதிலும் முதன்மையானவராக இருப்பீர்கள். இந்த மாதம் குருபகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து 6,8,10 ஆம் இடங்களைப் பார்ப்பதால் உடல் ரீதியான சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். மறைமுகத் தொல்லைகள் விலகும். உங்கள் செல்வாக்கிற்கு ஏற்பட்ட பாதிப்பு நீங்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவிற்கு வரும். சிலர் புதிய தொழில் தொடங்குவதற்கு முயற்சி செய்வீர்கள். பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதம். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். வெளிநாடு செல்வதற்காக முயற்சித்து வந்தவர்களுக்கு எதிர்பார்த்த அனுமதி கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகி நிம்மதி உண்டாகும். விவசாயிகளுக்கு யோகமான மாதமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி அதிக மதிப்பெண் பெறுவர்.

சந்திராஷ்டமம்: பிப். 28

அதிர்ஷ்ட நாள்: பிப். 21, மார்ச் 3,12

பரிகாரம் தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் தடைகள் பறந்தோடும்.

**உத்திரட்டாதி:** ஆயுள் மற்றும் கர்ம காரகனான சனிபகவான், தன புத்திர காரகனான குருவின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு நிர்வாக ஆற்றல் நிறைந்திருக்கும். சுயமாக முயற்சிகள் மேற்கொண்டு அதில் வெற்றி பெறக் கூடியவர்களாக இருப்பீர்கள் என்றாலும் சில தடைகள் உங்களுக்கு இருந்து கொண்டே இருக்கும். இந்த மாதம் உங்கள் குடும்பாதிபதியும் பாக்கியாதிபதியுமான செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உங்களுக்கிருந்த நெருக்கடிகள் விலக ஆரம்பிக்கும். விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி, சூரியன் உண்டாக்கும் பாதிப்புகளில் இருந்து விடுபடுவீர்கள். தெய்வ அனுகூலமும், பொருள் சேர்க்கையும் ஏற்படும். வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். போட்டியாளர்கள் விலகிச் செல்வார்கள். புதிய இடம் வாங்கும் முயற்சி, புதிய வீட்டில் குடியேறுதல் என்ற உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். சிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். சுக்கிர பகவானும் இந்த மாதம் முழுவதும் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு போன்றவை சிலருக்கு ஏற்படும். பெண்களுக்கு குடும்ப பொறுப்பு அதிகரிக்கும். வேலையில் இருந்த நெருக்கடி விலகும். வாழ்க்கைத்துணையுடன் சில சங்கடங்கள் தோன்றி மறையும் என்பதால் வார்த்தைகளில் நிதானம் தேவை. வெளியூர், வெளிநாடு செல்ல நினைத்தவர்களின் விருப்பம் நிறை வேறும். மாணவர்கள் கல்வியில் கூடு தல் கவனம் செலுத்தி தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவர்.

சந்திராஷ்டம்ம்: பெப். 29

அதிர்ஷ்ட நாள்:பெப். 17,21,26, பெப்.3,8,12

பரிகாரம் பைரவரை வணங்கினால்




மனபலம் அதிகரிக்கும்.

**ரேவதி:** கல்வி, அறிவு, வித்தை காரகனான புதன், ஞானக்காரகனான குரு அம்சத்தில் பிறந்த உங்களுக்கு எந்தவொரு செயலிலும் சாதுர்யமும் சாமர்த்தியமும் நிறைந்திருக்கும். உங்களை முன்னிறுத்திக் கொள்வதற்காக திட்டமிட்டு செயற்படுவீர்கள். அதில் வெற்றியும் அடைவீர்கள். இந்த மாதம் உங்கள் ராசிநாதன் இரண்டாம் இடமான தன குடும்ப வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இதுவரையில் இருந்த நெருக்கடிகள் விலகும். ஏழரைச் சனியால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் உண்டாகும். சூரிய பகவான் 12 இல் சஞ்சரிப்பதால் அரசு வழியில் சில நெருக்கடிகள் தோன்றும். வியாபாரிகள் வரவு செலவு விவகாரத்தில் கவனமாக இருக்க வேண்டும். லாப ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் எதிர்பார்த்த வருமானம் வரும். இடம் வாங்கி விற்கும் முயற்சி லாபம் தரும். விவசாயத்தில் இருந்த தடைகள் விலகும். மருத்துவம், கெமிக்கல், ஓட்டல், பெட்ரோலிய தொழில்களில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு ஒருபக்கம் நெருக்கடி ஏற்பட்டாலும் மறுபக்கம் அதை சமாளிக்கும் சக்தி உண்டாகும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகும். ஜென்ம ஸ்தானத்தில் ராகு, 7 இல் கேது சஞ்சரிப்பதால் நட்பு வட்டத்தில் எச்சரிக்கை தேவை. பேராசையால் தவறில் ஈடுபடுவோருக்கு அரசு வகையில் சங்கடங்கள் தோன்றும். பெண்களுக்கு யோகமாகமான மாதம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொன், பொருள் சேரும். குடும்பத்தில் அக்கறை செலுத்துவதும் வாழ்க்கைத் துணைவரை அனுசரித்துச் செல்வதும் நன்மை தரும். விவசாயிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும். வெளிநாட்டு முயற்சிகள் ஆதாயம் தரும். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்துவதும் ஆசிரியர்களின் ஆலோசனையை பின்பற்றுவதும் நன்மை தரும். சந்திராஷ்டமம்: மார்ச் 1

அதிர்ஷ்ட நாள்: பிப்.21,23, மார்ச் 3,5,12

பரிகாரம்: லட்சுமி நரசிம்மர் வழிபாடு நலம் தரும். (முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 410



"முதலில் அதை நான் லட்சியம் செய்யாமல் தானிருந்தேன். ஆனால் என்னுடைய வீரர்களுக்கு இதைத் தவிர வேறு பேச்சே இல்லாமற் போய்விட்டது. உண்மையிலேயே சிலர் பயப் பிராந்தி கொண்டு விட்டார்கள். அதன் பேரில் மர்மம் இன்னதென்பதைக் கண்டறியத் தீர்மானித்தேன். ஒரு நாள் இரவு அந்த ஓலம் வந்த திசையை நோக்கி, நானும் சில வீரர்களும் சென்றோம். புதர் மறைவிலிருந்து ஒரு ஸ்திரீ உருவம் வெளிப்பட்டது. ஒரு கணநேரம் எங்களைப் பார்த்துவிட்டுத் திகைத்து நின்றது. மறுபடி ஓடத் தொடங்கியது. எல்லோருமாக துரத்திச் சென்றால் அந்த உருவத்தைப் பிடிக்க முடியாது என்று என் மனத்திற்குள் ஒரு குரல் கூறியது. எனவே, மற்றவர்களை 'நில்லுங்கள்' என்று சொல்லி நிறுத்திவிட்டு, நான் மட்டும் தொடர்ந்து ஓடினேன். ஒரு தடவை அந்த உருவம் திரும்பிப் பார்த்தது. தனி ஆளாக நான் வருவதைப் பார்த்து என்னை வரவேற்கும் பாவனையில் காத்துக் கொண்டிருந்தது. இப்போது எனக்கும் திகிலாகத்தான் போய் விட்டது. ஒரு விநாடி நேரம் தயங்கி நின்றேன். மறுபடி நெஞ்சை உறுப்படுத்திக் கொண்டு முன்னால் சென்று அந்தப் பெண் உருவத்தை நெருங்கினேன். நிலா வெளிச்சம் அவள் முகத்தில் நன்றாக விழுந்தது. தெய்வீகமான அம்முகத்தில் புன்னகை அரும்பியிருந்தது. அந்தக் கணத்தில் எனக்கு நினைவு வந்து விட்டது. காவேரி அம்மன் இவள் தான்! என்னை வெள்ளம் அடித்துப் போகாமல் எடுத்துக் காப்பாற்றிய தெய்வ மங்கை இவள் தான்! சற்று நேரம் பிரமை பிடித்தவன் போல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு, "தாயே! நீ யார்! இங்கே எப்போது வந்தாய்? எதற்காக வந்தாய்? உன்னை எத்தனையோ காலமாக நான் தேடிக் கொண்டிருந்தேனே? என்னைப் பார்க்க விரும்பினால் நேரே என்னிடம் வருவதற்கென்ன? இந்தத் தாவடியைச் சுற்றி ஏன் வட்டமிடுகிறாய்? ஏன் புலம்புகிறாய்?" என்று அலறினேன். அந்த மாதரசி மறுமொழி சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் நான் கேட்டும் பயனில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது. அந்தக் கண்ணீர் என் நெஞ்சைப் பிளந்தது. அவள் ஏதோ சொல்ல முயன்றாள் என்று தோன்றியது. ஆனால் வார்த்தை ஒன்றும் வெளிவரவில்லை. உருத் தெரியாத சப்தம் ஏதோ அவள் தொண்டையிலிருந்து வந்தது. அப்போது சட்டென்று எனக்குத் தெரிந்துவிட்டது. அவள் பேசும் சக்தியில்லாத ஊமை என்று. அப்போது நான் அடைந்த வேதனையைப் போல் என்றும் அடைந்ததில்லை. இன்னது செய்வதென்று தெரியாமல் நான் செயலற்று நின்றேன். அந்த ஸ்திரீ சட்டென்று என்னைக் கட்டித் தழுவி உச்சி மோந்தாள். அவள் கண்ணீர்த் துளிகள் என் தலையில் விழுந்தன. உடனே, அடுத்த கணத்திலேயே, என்னை விட்டு விட்டு ஓடினாள். திரும்பிப் பார்க்கவும் இல்லை. நானும் அவளைத் தொடர்ந்து செல்ல முயலவில்லை. பாசறைக்குச் சென்றதும் என்னை ஆவலோடு சூழ்ந்து கொண்டு கேட்ட வீரர்களிடம், 'அவள் பேயும் அல்ல பிசாசும் அல்ல சாதாரண ஸ்திரீதான். வாழ்க்கையில் ஏதோ பெருந்துயரத்தினால் சித்த பிரமை கொண்டிருக்கிறாள். மறுபடியும் அவள் வந்தால் அவளைத் தொடர்ந்து போய்த் தொந்தரவு செய்யாதீர்கள்?' என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டேன்.

"மறுநாள் முழுதும் அங்கிருந்து தாவடியைக் கிளப்பிக் கொண்டு போய்விடலாமா என்ற யோசனை அடிக்கடி எனக்குத் தோன்றி வந்தது. ஆனாலும் முடிவு செய்யக்கூடவில்லை. ஒரு வேளை மறுபடியும் அந்த ஸ்திரீ வரக்கூடும் என்ற ஆசை மனத்திற்குள் இருந்தது. இத்தகைய யோசனையிலேயே பொழுதும் போய்விட்டது. இரவு வந்தது. நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தாவடிக்கு அருகில் அந்த ஓலக் குரல் கேட்டது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## மணி அடித்த குரங்குகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

இரவு பகல்னு தொடர்ந்து மணி சத்தம் கேட்டதால, ஊர் மக்கள் அந்த நாட்ட ஆண்ட ராஜா கிட்ட போயி சொன்னாங்க.

அந்த ராஜா சொன்னாரு இந்த பிரச்சினைக்கு யார் காரணம்னு கண்டு பிடிச்சி, அந்த மணி சத்தத்தை நிறுத்துறவங்களுக்கு நிறைய பரிசு கொடுக்குறேனு எல்லாருகிட்டயும் சொன்னாரு.

இத கேட்ட ஒரு பாட்டி தைரியத்தோட காட்டுக்குள்ள



போனாங்க. அங்க குரங்குகள் மணிய வச்சு விளையாடிக் கிட்டு இருந்ததைப் பார்த்தாங்க.

அடடா இது குரங்குகளோட வே[illegible]யானு நினைத்த அந்த பாட்டி, அந்த மணிய குரங்குங்க கிட்ட இருந்து எப்படி பிடுங்குறதுனு ஒரு திட்டம் போட்டார்.

[illegible] தைக்கு போயி நிறைய பழங்கள் காய்கறிகள் எல்லாம் வாங்கி ஒரு கூடையில் போட்டு எடுத்துக்கிட்டு திரும்ப அந்த காட்டுக்கு போனாங்க.

காட்டுக்கு போன அந்த பாட்டி குரங்குகளுக்கு தெரியிற மாதிரி அந்த கூடைய வச்சிட்டு தூங்குற மாதிரி நடிக்க ஆரம்பிச்சாங்க.

அந்த கூடைய பார்த்த குரங்குகள் மெதுவா மரத்துல இருந்து ஒவ்வொண்ணா இறங்கி வந்து பார்த்துச்சுங்க.

மெதுவா ஒவ்வொரு குரங்கா அந்த கூடையில் இருந்த பழங்களையும் காய்கறிகளையும் எடுத்து திங்க ஆரம்பிச்சுச்சுங்க.

அப்ப மணி வச்சிருந்த குரங்கும் மெதுவா கீழ இறங்கி வந்துச்சு. கீழ வந்த அந்த குரங்கு மணிய கீழ போட்டுட்டு ஒரு பழத்தை எடுத்து திங்க ஆரம்பிச்சுச்சு.

இத எல்லாம் ஒர கண்ணால பார்த்து கிட்டு இருந்த அந்த பாட்டி டக்குனு அந்த மணிய எடுத்துக்கிட்டாங்க.

மணிய எடுத்த பாட்டி நேரா அரசர்கிட்ட போயி நடந்தது எல்லாம் சொன்னாங்க. தைரியத்தோடவும் புத்திசாலித்தனத்தோடவும் மணிய எடுத்துட்டு வந்து பிரச்சினையை தீர்த்த அந்த பாட்டிக்கு நிறைய பரிசு கொடுத்தாரு அந்த அரசர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
> – காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுக்குள் முரண்பாடாயினும் பட்டாபிஷேகத்தை தடுக்காதீர்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி உட்பட அனைத்துத் தெரிவுகளையும் மீளவும் நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சிவஞானம் சிறீதரன் கூறியிருப்பது அவரின் தலைமைச் சிறப்பைக் காட்டி நிற்கிறது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்குத் தடை விதிக்குமாறும் கட்சியில் இடம்பெற்ற தெரிவுகள் யாப்பு விதிகளுக்கு அமைய நடைபெறவில்லை எனவும் கூறி சிலர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இங்கு வழக்குத் தாக்கல் செய்தவர்களின் நோக்கம், அவர்களின் பின்னணி, அவர்கள் தாம் தொடுத்த வழக்குக்கு சார்பாக முன்னிறுத்திய வழக்குரைஞர்கள் என்பன பற்றி நாம் எதுவும் ஆராயவில்லை.

அவ்வாறான ஆய்வில் ஈடுபடுவது அந்தக் கட்சியை மென்மேலும் பலவீனப்படுத்துவதாக இருக்கும் என்பதால், அதுபற்றி தற்காலிக மௌனத்தைப் பின்பற்றுவதுதான் தர்மம் எனக் கருதுகின்றோம்.

அதேநேரம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றோடு பயணித்த ஒரு பெரும் கட்சிக்கு இத்தகையதொரு அவலம் வந்துற்றதே என்ற கவலையும் இருக்கவே செய்கிறது.

பரவாயில்லை. உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பதுபோல வீட்டுக்குள் முரண்பாடும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டு விட்டால், சந்தி சிரிக்கும் அளவில் நிலைமை வந்துவிடும்.

இதை நாம் கூறும்போது, அப்படியாயின் வீட்டுக்குள் முரண்பாடுகள் ஏற்படாதா? அல்லது ஏற்படக்கூடாதா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

வீட்டுக்குள் முரண்பாடுகள் – கருத்து வேற்றுமைகள் ஏற்படுவதில் எந்தப் பிழையும் இல்லை.

ஆனால் நாம் கூறுவது; வீட்டுக்குள் ஏற்படுகின்ற எதிர்வாதங்கள் வீட்டுக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து வீட்டுக்குள் ஏற்பட்ட குழப்பம் பட்டாபிஷேகத்தைத் தடுப்பதாக இருக்கக் கூடாது.

சரி பட்டாபிஷேகம் இப்போது நடக்காவிட்டால், பின்னர் நடக்கும் தானே என்பது உங்களின் வாதமாக இருக்கலாம்.

இங்குதான் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கூறவேண்டியுள்ளது.

அதாவது பட்டாபிஷேகம் தடுக்கப்படுமாக இருந்தால், சிம்மாசனத்தில் பாதுகை இருக்கின்ற பரிதாப நிலைமையே ஏற்படும். இதனை நம் அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதை நாம் கூறும்போது, ஐயா! இஃதெல்லாம் பேசுகிறீர்களே! கைகேயிக்கு தசரதன் கொடுத்த இரு வரத்தை – கைகேயி மீது தசரதன் காட்டிய மேலான கருசனையை ஏன்? வியாபிக்க மறுக்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

அன்புக்குரியவர்களே! வரம் கொடுத்த தன் விளைவை முதலில் அனுபவித்தது தசரதனே

ஆக, முதுமை வயப்பட்டவர் எல்லாம் இழுந்து இப்போது தேவையற்றவராகி இருக்கிறாரே அதுதான் அவருக்கு இயற்கை விதித்த தண்டனை என்றுணர்க!

# தேர்தலை பிற்போட நினைத்தால் ரணில் விரட்டப்படுவார் - ஜே.வி.பி

(குருநாகல்)

ஜனாதிபதித்தேர்தலை பிற்போட நினைத்தால் ரணில் தனது பதவிக் காலம் முடிவதற்கு முன்னரே, அவர் வீட்டிற்குச் செல்ல நேரிடும் என ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட மகளிர் மாநாட்டில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்ற புதிய விவாதம் எழுந்துள்ளதாகவும், அது காலங்காலமான கோஷம் எனவும் தெரிவித்தார்.

ரணில் தந்திரமானவர் என்று சிலர் சொல்கிறார்கள். அவர் பாராளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தில் ஜனாதிபதியானார். ஜனாதிபதித் தேர்தலிலும் தப்பிக்க ஏதாவது செய்வார். ரணில் கூறுவதுபோல் தந்திரமானவர் அல்ல. அதற்கு முன்னரே அவர் வீட்டிற்கு செல்ல வேண்டியிருக்கும்.

ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்சவின் கோரிக்கையை சஜித் பிரேமதாஸ நிராகரித்ததால்தான் ரணில் ஜனாதிபதியாக முடிந்தது. இல்லையெனில் ரணில் இப்போது வெறும்பாராளுமன்றஉறுப்பினராக இருந்திருப்பார். பின்னர் சரத் பொன்சேகா ஜனாதிபதியாக பதவியேற்க முனைந்தார். பொன்சேகா முடிவெடுப்பதற்கு மூன்று நாட்கள் தேவை எனக் கூறப்பட்டது. மூன்று நாட்கள் தாமதிக்க கோட்டாபய தயாராக இருக்கவில்லை. மூன்றாவது தெரிவாக ரணிலிடம் கோரிக்கை விடுத்தார். தனக்கு நஷ்டம் ஏதும் இல்லை என்பதால் ரணில் அதனை ஏற்றுக் கொண்டார் என அநுர குமார கூறினார். (ம-7)

# எமது இந்திய விஜயம் தொடர்பில் அவதூறு பரப்பாதீர்

## அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

பல்வேறு அரசியல் நோக்கங்களின் பகடைக்காயாக மாறி தமது கட்சிக்கு அவதூறை ஏற்படுத்த வேண்டாம் என மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதியிடம் மிகக் கௌரவமான முறையில் கோரிக்கை விடுப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத்வெளியிட்ட அவர்,

"குறிப்பாக எனது இந்திய விஜயத்தின் பின்னர் நாட்டில் அரசியல் கட்சிகள் மிகவும் குழப்பமடைந்திருப்பது அதிசயமல்ல.

எனினும் அதில் நாட்டின் பிக்குமாரை பயன்படுத்தி தமது அரசியல் அபிலாசைகளை தீர்க்க முனைவது பாரதூரமான பிரச்சினை என்பதுடன் அது பௌத்ததர்மத்திற்கு செய்யும் அவமதிப்பு.

இந்திய விஜயத்தின் போது தேசிய மக்கள் சக்தியின் தேசிய பணிகளுக்காக 300 கோடி ரூபாய்வழங்கப்பட்டது என மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ள கருத்து தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகி வருகிறது.

300 கோடி ரூபாயை இந்தியா வழங்கியது என்பது முற்றிலும் பொய்யானது.

இதனால், பௌத்த தர்மத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில், அரசியல் கட்சிகள் பௌத்த பிக்குமாரை பயன்படுத்துவதை நிறுத்துமாறும் சம்பந்தப்பட்ட கட்சிகளிடம் வலியுறுத்துகிறோம்.

பல்வேறு பொய்யான விடயங்களை காலத்திற்கு காலம் கொண்டு வந்து, சேறுபூசும் நடவடிக்கையானது எனது அரசியல் வரலாற்றில் பழகிப்போன ஒன்று" என்றார். (ம-7)

# ஆசிரிய வெற்றிடங்களினால் மாணவர்களுக்கு கடும் பாதிப்பு

## கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான முன்னோடித் திட்டத்தை மார்ச் மாதம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இந்த ஆண்டுக்கான பாடசாலை கால அட்டவணை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் சுற்றறிக்கை மூலம் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும்.

மேலும், பாடசாலை செல்லாத பிள்ளைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவதால் பாடசாலைக்குச் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைகிறது.

மேலும், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பை மேற்கொள்ள நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. அடுத்த இரண்டு வாரங்களில் நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். 20,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளதால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற ஆசிரியர்கள் காரணமாக மாகாண மட்டத்தில் 13, 500 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் ஆட்சேர்ப்பு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், விரைவில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியும் என்றார். (ம-7)

# கடன் வட்டி வீதங்கள் கணிசமாகக் குறைப்பு

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கிகளும் கடந்த வாரத்தில் அவற்றின் சராசரி எடையுள்ள முதன்மை கடன் வட்டி வீதங்களை (AWPR) கணிசமாகக் குறைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.


கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு 25.35% ஆக இருந்த, உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் சராசரி எடையுள்ள முதன்மை கடன் வட்டி வீதம் தற்போது 11.61 ஆக குறைந்துள்ளது.

மக்கள் வங்கி கடந்த வாரத்தில் ஏனைய வணிக வங்கிகளை விட முதன்மை கடன் வட்டி வீதத்தை 10.87 ஆக குறைத்திருந்தது.

இது தவிர, ஹட்டன் நஷனல் வங்கி (11.47%), கொமர்ஷல் வங்கி (11.59%), யூனியன் வங்கி (11.55%), ஃபேன் ஏசியா வங்கி (11.85%), நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி (11.74%), NDB வங்கி (11.94%) மற்றும் அமானா வங்கி (11.10%) ஆகிய வங்கிகளிலும் சராசரி முதன்மை கடன் வட்டி வீதத்தை 12% இக்கும் குறைவாகப் பேணப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

06

மொழி முதல் சகரம் ஸகரமாக ஒலித்தல் (சாப்பாடு - ஸாப்பாடு) ழகரம் ளகரமாகவும் (பழம் - பளொம், மழை - மள) போன்ற ஒலி நிலை மாற்றங்கள் இதில் குறிப்பிடத்தக்கவை. கொங்குத் தமிழில் அமையும் மரியாதை விகுதிகள் பேச்சில் அழுத்தமாக அமைகின்றன. எ-கா- ஏனுங்க, கேட்டுப்புடுங்க

**இலங்கைக் கிளைமொழி**

யாழப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், திருகோணமலைத் தமிழ், நீர்கொழும்புத் தமிழ், மலைநாட்டுத் தமிழ் என்னும் ஐந்து உட்கிளை மொழிகள் இலங்கைத் தமிழில் அமைந்துள்ளன. முஸ்லிம் தமிழர்களும், பிறதமிழர்களும் பேசும் தமிழிலும் சில வழக்கு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**சமூகக்கிளை மொழி**

இந்திய சமூகம் இறுக்கமான சாதிய அமைப்பைக் கொண்டது. சொல்வழக்குகளில் சாதி சார்ந்த வேறுபாட்டை ஆங்காங்கே காண முடிகிறது. ஒவ்வொரு சாதியினரும் தனித்த அடையாளத்தினைப் பின்பற்றுவதில் போட்டியிடுகின்றனர். குறிப்பிட்ட சாதிக்குள் மட்டும் மண உறவுகொள்வதால், அவர்களிடையே நிலவும் பேச்சு மொழி தனித்து விளங்குகிறது.

தமிழகத்தில் பெரும்பான்மையாக ஒரே மாவட்டத்தில் வாழும் சாதியினரின் மொழியானது தனிப்பட்ட வழக்குடையது. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டாரத்தில் கள்ளர் சாதியினரும் குமரி மாவட்டத்தில் நாடார் சாதியினரும், கோவை மாவட்டத்தில் கவுண்டர் சாதியினரும் பெருமளவில் வாழ்கின்றனர். இவர்கள் பல்லாண்டுகளாக ஒரே புவியியல் எல்லைக்குள் வாழ்ந்து வருவதால், இவர்களுடைய மொழியானது தனித்து விளங்குகிறது.

உறவுமுறைச் சொற்களில் ஒவ்வொரு சாதியினரும் ஒவ்வொரு விதத்தினைப் பின்பற்றுகின்றனர். அப்பாவின் அப்பாவை அய்யாப்பா, அப்ச்சி, அய்யா, பாட்டையா, தாத்தா, அப்பப்பா போன்ற சொற்களில் ஏதோ ஒன்றினால் அழைப்பது ஒவ்வொரு சாதியினரிடமும் தனித்துக் காணப்படுகிறது.

தமிழில், பிராமணர், ஆதி திராவிடர், வேளாளர், வன்னியர், நகரத்தார், கள்ளர் முதலியோரின் மொழி வழக்குகள் தனித்தனியே உள்ளன. பிராமணர்களின் பேச்சு வழக்கிற்கும், பிராமணர் அல்லாதவரின் பேச்சு வழக்கிற்கும் வேறுபாடுகள் தெளிவாக உள்ளன.

நேக்கு, நோக்கு, அவா முதலிய சொற்கள்தோப்பனார், ஆத்துக்காரி, மாட்டுப்பெண், அத்திம் பேர் முதலிய உறவு முறைப் பெயர்கள், செஞ்சிண்டான் (செய்து கொண்டான்) நன்னாட்டு (நன்றாக ஆகி விட்டது) போன்ற வழக்குகள் பிராமணர் பேச்சுத் தமிழை அடையாளப்படுத்துகின்றன.

சைவ, வைணவப் பாரம்பரியங்களின் அடிப்படையில் ஒரே பொருளுக்கு வெவ்வேறு பேச்சு வழக்குகள் இருப்பதைக் காணலாம். அய்யர் பேச்சு வழக்கில் அமையும் அரிசி, பாயாசம், புளிசாதம் ஆகிய சொற்கள் அய்யங்கார் பேச்சு வழக்கில் முறையே அமுது படி, திருக்கண்ணமது, புளியோதரை என வழங்கப்படுகிறது.

இவ்வாறு சாதி அடிப்படையில் தனித்து வழக்கிலிருக்கும் சொற்கள் இன்னும் தொகுக்கப்படவில்லை. இத்தகைய சொற்கள் தொகுக்கப்படும் போது, சொல்லாக்க முயற்சிகளுக்கு அவை மூலமாக அமைந்திட வாய்ப்புண்டு.

**தொழில்சார் மொழி வழக்குகள்**

தொழில் சார்ந்த தனிச்சமூக வாழ்வைக் கொண்ட குழுவினரிடம் சிறப்பு வழக்குகள் சில காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மீனவர் பேச்சில் வலை, நீர், காற்று, மணல், மீன், கட்டு மரம் போன்றவற்றைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன.

புதிய சொற்கள் உருவாக்கிட வேண்டும் போது, ஏற்கனவே தொழிலாளர்கள் கைவினைஞர்கள் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவது ஏற்புடையது. ஏனெனில் இத்தகைய சொற்கள் ஏற்கனவே தமிழில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் மட்டும் வழக்கிலிருந்தவை என்பதனால், அவற்றைப் பொதுத் தமிழில் கொண்டு வரும் போது விரைவில் பரவலான ஏற்பு கிடைத்துவிடும்.

Screw driver என்ற கருவிக்குத் தமிழில் துறை வல்லுநரால் புரிமுடுக்கான் என்ற கலைச் சொல் உருவாக்கப்பட்டது. ஆனால் மர வேலை செய்யும் கைவினைஞர்கள் அதனைத் திருப்பு உளி என்று குறிப்பிட்டு வருகின்றனர். இந்நிலையில் ஒப்பிட்டு ஆராய்கையில் திருப்பு உளி என்ற சொல் பொருத்தமானது என்ற முடிவுக்கு வரலாம்.

இக் காலத்தில் கிளை மொழி வேறுபாடுகள் குறைந்து வருகின்றன. கல்விப் பரவல், தகவல் தொடர்பு ஊடகங்களினால் செல்வாக்குப் பெற்று வரும். பொது மொழி, அரசுப் பணி, வணிகம் சார்ந்த குடிப் பெயர்வுகளால் கிளை மொழிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் படிப்படியாகக் குறைந்து வருகின்றன.

**சமய வழக்குச் சொற்கள்**

சமய அடிப்படையிலும் தமிழானது தனித்த அடையாளத்துடன் வழக்கிலுள்ளது. ஏறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழி பெயர்க்கப்பட்ட கிறிஸ்தவ வேதமறையான விவிலிய காணப்படும் சமஸ்கிருதம் தழுவிய சொற்கள், இன்றும் கிறிஸ்தவர்களிடையே வழக்கிலுள்ளன. கிறிஸ்தவர்கள் வழிபாட்டுக் கூட்டங்களிலும் ஜெபக் கூட்டங்களிலும் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் அவர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

அவர்கள் இறைவனிடம் அருள் வேண்டி மன்றாடும் பல சொற்கள் இன்று பொதுத் தமிழில் வழக்கிறந்து விட்டன. என்றாலும் அத்தகைய சொற்களுக்கு நிகரான புதிய சொற்களை வழிபாட்டில் பயன்படுத்த அவர்கள் தயாராக இல்லை. விவிலியத்தில் உள்ள சொற்கள் புனிதமாக்கப்பட்டுவிட்டன.

இஸ்லாமியர்கள் தொடக்கத்தில் அரபுமொழியின் வழியே இறைவனைத்தொழுது கொண்டிருந்தனர். அண்மைக் காலமாகத் தமிழிலும் வழிபாடு நடத்துகின்றனர். அதற்குத் துணையாக குரானைத் தமிழாக்கியுள்ளனர். எனினும் அரபு மொழியிலுள்ள முக்கியமான சொற்களைத் தமிழுடன் கலந்து எழுதுகின்றனர். அரபுச் சொற்களை இயல்பாகக் கலந்து பேசுகின்றனர்.

இஸ்லாம் கிறிஸ்தவ சமயத்தினர் சமய அடிப்படையில் அவர்களுக்கெனத் தனித்துப் பயன்படுத்தும் சொற்கள் இன்னும் தொகுக்கப்படாமலே உள்ளன. இத்தகைய சொற்கள் சேகரிக்கப்படும் போது, அவை சொல் மூலங்களாக விளங்கும்.

வட்டார வழக்குகள் சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம், அடுக்குத் தொடர் என்று அமைந்திருப்பதோடு ஒருவாக்கியத்திலேயே, ஒரு பாடலிலேயே, ஒப்பாரியிலேயே ஒரு மனிதனுடைய, ஒரு குடும்பத்தினுடைய ஒரு சமூகத்தினுடைய முழுக்கதையையும் சொல்லிவிடும். இது தான் வாய்மொழி - வட்டார வழக்கின் ஆகச் சிறந்த சிறப்பு-ஆற்றல். வட்டார வழக்குகளை ஒருவரையறைக்குள் நிச்சயமாக கொண்டு வரமுடியாது. அப்படிக் கொண்டு வருவது எளிதான காரியமுமல்ல.

**யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் பற்றி சில வரிகள்...**

யாழ்ப்பாணத் தமிழர்கள் அடர்த்தியாக வாழுகின்ற சிறிய நிலப் பகுதியான யாழ்ப்பாணக் குடாநாடு, அதன் மக்கள் தொகையிலும், பல மடங்கு அதிக மக்கள் தொகை கொண்ட தமிழ் நாட்டுக்குச் சில மைல்கள் தொலைவிலேயே அமைந்திருந்த போதும், குறிப்பிடத்தக்க தனித்துவமான அம்சங்களுடன் கூடிய பேச்சுத் தமிழ் வழக்கு யாழ்ப்பாணத்தில் உருவானதற்கு, அரசியல் மற்றும் வரலாற்று அம்சங்களே காரணமாகும்.

தமிழ் ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களுக்கான உச்சரிப்புகள் இன்னது தான் என வரையறுக்கப்பட்டு இருந்தாலும், பேச்சுத் த்மிழில் அவற்றின் உச்சரிப்புகள் பலவேறுபாடுகளை அடைவதை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்துத் த்மிழில் இந்த உச்சரிப்புகள் எந்த அளவுக்கு சரியான விதிகளுக்கு அமைய உள்ளன என்பதைக் கருதும் போது கவனத்துக்கு வரும் அம்சங்கள் சில பின்வருமாறு.

யாழ்ப்பாணத்தவர் ழகரத்தைச் சரியாக உச்சரிப்பதில்லை. இங்கே ழகரமும், ளகரமும் ஒன்று போலவே உச்சரிக்கப்படுகின்றன. வாழைக்கும், வாளைக்கும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில உச்சரிப்பு வேறுபாடு கிடையாது. தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலும், கொங்கு தமிழிலும் இவ்வாறே உச்சரிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தவர் பேசும் போது ரகர - றகர, லகர - ளகர, மற்றும் னகர - ணகர வேறுபாடுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

றகர மெய் இரட்டித்து வரும் போது யாழ்ப்பாணத்து உச்சரிப்பு வட தமிழ்நாட்டு உச்சரிப்புடன் ஒத்து அமைவதில்லை. வட தமிழகத்தில் ற்ற, ற்றி .... என்பன t-ra, t-ri என உச்சரிக்கப்படும் போது, தென் தமிழகத்தின் உச்சரிப்புப்போல் குறிப்பாக கன்னியா குமாரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைப் போலயாழ்ப்பாணத்தில் t-ta, t-ti என உச்சரிக்கப்படுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மத்திய...

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று திங்கட்கிழமை ஆட்சேபனை அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரிக்கு முன்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

208 ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியம்மிக்க ஒரு ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை விரைவில் பெற்றுத் தருவதாக கடற்றொழில் அமைச்சரும் கல்லூரியின் பழைய மாணவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,33)

## அல்லைப்பிட்டியில்...

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)



















## புலிகளால்...

புலிகள் அமைப்பினால் யுத்த காலப் பகுதியில் தங்க ஆபரணங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்த நிலையில் நேற்று அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது நீதவான், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர் உள்ளிட்டோர் முன்னிலையில் குறித்த அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. (ம-7,316)

## வவுனியாவில்...

கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து தம்பனைச் சோலை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பொலிஸார் சோதனைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது 80 ஆயிரம் மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## காங்கேசன்துறை...

கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

சந்தோஸ் ஜா, காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் தலைமன்னார் கடற்பகுதிக்கு விஜயம் செய்தபோது, இரு நாடுகளுக்கிடையிலான கப்பல் சேவைகளை துரிதமாக மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கையின் - காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகியது.

பின்னர் இச்சேவையானது, நிறுத்தி வைக்கப்பட்டு ஆரம்பமாகி மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் சந்தோஸ் ஜா இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

## கைதடியில்...

பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது.

வீட்டில் ஆட்கள் எவரும் இல்லாத வேளையில் மேற்படி தீ விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஆடைகள் ஆகியன தீயில் எரிந்து நாசமாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை தீப்பிடித்தமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## பொருட்களின்...

பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி குறைவடைந்

துள்ள நிலையில், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முதல் லங்கா சதொச நிறுவனத்திற்கு தினமும் 10 இலட்சம் முட்டைகள் விநியோகிக்கப்பட்டதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சந்தைக்கு அதிகபட்சமாக முட்டை விநியோகம் செய்யப்பட்டாலும் சந்தையில் முட்டைத் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாத காரணிகள் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

சில பேக்கரி உரிமையாளர்கள் தமது உற்பத்திகளுக்கு தேவையான முட்டைகளை இருப்பு வைக்கும் போக்கு காணப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதித்...

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது ஜி.எல். பீரிஸ் மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நீதிக்...

திற்கு வழங்கப்பட்ட ஆதரவும், ஊக்கமுமே மனவலிமையுடன் போராட்டத்தை கொண்டு நடத்த உதவியுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்தப் பேரணியில் கலந்து எமக்கு ஊக்கமளிப்பதுடன் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் எங்கள் முயற்சியில் பங்கு கொள்ளுமாறும் குறித்த சங்கத்தினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 636 3377

# மத்திய வங்கி பொய்யுரைக்கிறது

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயங்களுக்குத் தீர்வு காணும் வகையில், மத்திய வங்கியினால் விடுக்கப்படும் செய்திகள் குறித்து அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறித்த அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)






















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19178)

076 825 7716 (ஆகாஸ்)

# கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முனைக்காடு களப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டதோடு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது, பொலிஸார் சுமார் 150 போத்தல்கள் கசிப்பினை கைப்பற்றியுள்ளதுடன் 350,000 மில்லி மீற்றர் கோடா, உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவரை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# யாழ்.கட்டளைத் தளபதியுடன் வடமாகாண ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் அவர்களுக்கும் யாழ். பிராந்திய பாதுகாப்புப்படைத் தலைமையகக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவுக்கும் இடையில் விஷேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். பிராந்தியத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை உரிய வகையில் முன்னெடுத்துச் செல்லல், பொது மக்களின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகளின் போது தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மீள குடியேற்றப்பட்டவர்களுக்காக பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (ம-7,33)

**பதவி வெற்றிடம்**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.

- விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் (வேறுகம்பனிகளில் வேலை செய்த அனுபவம்)
- விற்பனை நிறைவேற்று அலுவலர். (ஆண்கள் / பெண்கள்)

தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்
( நேர்முகத் தேர்வை உறுதிசெய்ய )

076 231 8693 (19175)

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503 (19118)

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும்
பிரபல நகை விற்பனை நிலையத்திற்கு
நகை விற்பனையில்
அனுபவம் உள்ள பழக விரும்புவோர், ஆண் / பெண் பணியாளர்கள் தேவை.
யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
காலை 9.00 மணிக்குப் பின்னர் தொடர்புகொள்ளவும்.

076 247 0257 (C-8382)

**யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு
அருகில் காட்டு கந்தோர்
வீதியில். A9 வீதியில் இருந்து
300 மீற்றர் தொலைவில்
1 வெட்டுக்கிணறுடன் கூடிய
7 பரப்புக் காணி விற்பனைக்கு

விலை 1 பரப்பு 15 மில்லியன் ( 1 கோடியே 50 இலட்சம் )

எந்த நேரமும் பார்வையிடலாம்


லெபன் - 076 873 9479
சாந்தி - 075 432 2011 (19173)

**விற்பனைக்கு**

Suzuki 150 - BER XXXX எனும் தொடர் இலக்கத்தை கொண்ட மோ.சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

077 203 0309 (19016)

# மரண அறிவித்தல்



## நாகப்பர் நாகேஸ்வரன்

குடத்தனையைப் பிறப்பிடமாகவும் ஊரிக்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட நாகப்பர் நாகேஸ்வரன் அவர்கள் கடந்த 17.02.2024 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - செல்லபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் லதா அவர்களின் பாசமிகு கணவரும் ஜீவிதா (அவுஸ்திரேலியா), அம்ருதா (உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முகுந்தன் (அவுஸ்திரேலியா), ஜெயசுதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நாகேஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (அமெரிக்கா), நாகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரவிதாஸ் (ஜேர்மனி), சீதா (ஜேர்மனி), ராதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அக்ஷயன், அஸ்விகன், ஜர்ஷிகன், ஜதுஷனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2024) செவ்வாய்க்கிழமை 15ஆம் கட்டை உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 10.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

15ஆம் கட்டை,
உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி. (19166)

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:- 076 872 2221

**வேலையாள் தேவை**

| | |
|---|---|
| மேசன் | - 2000/= - 2500/= |
| மேசன் உதவியாளர் | - 2000/= |
| பெயின்ரர் | - 2000/= - 2500/= |
| வெல்டிங் உதவியாளர் | - 2000/= |

காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 5.00 மணி வரை

077 210 0749 (19174)

**J & J. Tailors**

தையல் பயிற்சி வகுப்புக்கள்
புதிய மாணவர்கள்
(பெண்கள்)
சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தொழில் வாய்ப்பும் உண்டு.

077 452 2224 (19169)

**மலிவு விற்பனை**

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், காட்டன் புடவைகள், சல்வார் துணிகள், சல்வார் பட்டுப்பாவாடைகள், ரொப் மற்றும் சாறி, உள்பாவாடைகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

075 990 6993 (19170)

**V2 VISA SERVICES**
**கனடா** Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8384)

# 8ஆம் ஆண்டு நினைவுநாள்



அமரர்

## தெய்வேந்திரன் பகீசன்

தோற்றம் : 06.05.1989 மறைவு : 20.02.2016

*பிறப்பின் உன்னதங்களை உணர முன்பே*
*இறப்பின் வலியை தந்தாய்*
*துயரம் தோய்ந்த காலத்தின் ஆக்கிரமிப்பு*
*இன்னும் அகலவில்லையே!*

" தாரணி "
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (19177)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org